வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc

PO Box 557 Wentworthville NSW 2145

info@wtsc.org.au
www.wtsc.org.au

# தமிழ் அறிவுப் போட்டி 2025

## ஆண்டு 9

### மாதிரி வினாக்கள்

போட்டி நடைபெறும் திகதிகள்: **01-11-2025** மற்றும் **08-11-2025**

**1.** குயில் கூவும், மயில்?

1) அலறும் 2) ஆடும்

**3)** அகவும் 4) இரையும்

**2.** எதனையும் முன் கூட்டியே செய்ய வேண்டும் எனும் கருத்தைத் தரும் பழமொழி?

விடை: வெள்ளம் வரும் முன் அணைகட்ட வேண்டும்

**3.** அரண்மனையில் மகளிர் தங்குவதற்குரிய தனி இடம்?

விடை: அந்தப்புரம்

**4.** வயலும் வயல் சார்ந்த நிலமும் எவ்வாறு அழைக்கப்படும்?

1) நெய்தல் 2) பாலை

**3)** மருதம் 4) முல்லை

**5.** பசுக்கள் மற்றும் காளைகளை கட்டி வைக்கும் இடம் எது?

விடை: தொழுவம்

**6.** ‘அண்ணளவானது’ என்ற சொல்லின் ஒத்தசொல்?

**1)** கிட்டத்தட்ட 2) திட்டவட்டமான 3) கையுங்கணக்கும்

**7.** ‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ இங்கு மிடுக்கு என்பதன் பொருள்?

**1)** வலிமை 2) மென்மை 3) திறமை

**8.** தமிழின் மிகப்பழமையான இலக்கண நூல்?

விடை: தொல்காப்பியம்

**9.** திருக்குறளின் பெரும் பிரிவுகள் எவை?

விடை: அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்

**10.** கிடைத்தற்கரிய நூதனமான பொருட்கள் மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளன. மியுசியம் **(Museum)** என்ற சொல்லின் தமிழ் சொல்?

**1)** அருங்காட்சியகம் 2) நூலகம் 3) அறிவகம்

**11.** உழவன் வயலில் வேலை செய்கின்றான். இங்கு உழவன் என்பதன் பெண்பாற் சொல்?

1) உழதி **2)** உழத்தி 3) உழவி 4) உழவச்சி

**12.** இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை எனும் பழமொழி வெளிப்படுத்தும் கருத்து?

விடை: எதிலும் திருப்தி இல்லாத மனம்

**13.** ஐம்பதாவது ஆண்டு கொண்டாடப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?

**1)** பொன் விழா 2) வைர விழா

3) வெள்ளி விழா 4) மணிவிழா

**14.** பாவேந்தர் எனப் போற்றப்படுபவர் யார்**?**

விடை: பாரதிதாசன்

**15.** ஐம்புலன்கள் எவை**?**

விடை: பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், தொடுதல்